முருகப்பெருமான் துணை

**மகான் வியாக்ரமர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.09.2023**, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான பிரம்மமே
ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரன் அவதாரமாக வந்து
ஓங்கார குடில் படைத்து அருளும்
2. அருளும் அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் அறிவுரை ஆசி
வரமென சோபகிருது யாளி திங்கள்
வல்லமைபட மூவை திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 15 ம் நாள், 01.09.2023, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் வியாக்ரமர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமின்றி நல்லுலகம் படைக்க
சூட்சும பலம் தருகின்ற அரங்கன்
4. அரங்கன் உயர் ஆசி ஏற்று
அறமாக வழங்கும் உபதேசங்களை
வரங்களாக மக்கள் ஏற்று
வணங்கித் தீட்சை பெற்றும் வர
5. வருகவே வினை நீக்கமுடன்
வருங்காலம் உணரும் திறனும்
தருமநெறி விட்டு அகலாத
தனித்துவம் கொண்ட வாழ்வாக
6. வாழ்க்கை முறைதனை மாற்றி
வையகத்தில் ஞானவான்களாக
ஊழ்போக்கும் மகா சக்திகளாக
உலகைமாற்றும் ஞானிகளாக

7. ஆகவே உலகோர் தேற்றம்
அரங்கனால் இனிதே கண்டு
வகைபட ஞான உலகமாக
வையகம் மாற்றம் காண்கும்
8. காண்கவே கலியுக மக்கள்
கருணைமிக்க தருமம் நிறைந்த
ஆன்மீக உயர் வழிகாட்டுகின்ற
அரங்கன் சபை நோக்கி வர
9. வருகவே வளர்ச்சி நிலையுமாக
வஞ்சம் சூழ்ச்சிகளை வென்று
முருகப்பெருமானை தொடர்ந்து
முழுசரணாகதிபட வணங்கி
10. வணங்கி அகஜோதி எழும்ப
வடிவேலனே வாசி வசமாக்க
இணங்கி ஞானியர் படைகள்
எல்லாவரமும் தந்தருள்புரிய
11. அருள்புரிய தனி மனிதன் அல்லாது
அகிலத்தார் அனைவரும் தேறி
அருள்மிகு ஞானஉலகு படைப்பர்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—